# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 1999/2000 (வெளிவாரி)
## (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## FA 301 கலை வரலாறு

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. வரலாற்றுக்கு முற்பட்டகாலக் கலை வரலாறு என நீர் கருதுவது யாது? அக்காலக் கலைகளின் தன்மைகளை உதாரணங்களுடன் விளக்குக.

2. பரதமுனிவரின் கலைக் கோட்பாட்டினையும், அரிஸ்டோட்டலின் கலைக் கோட்பாடடினையும் தந்து அவற்றுள் யாதாயினும் ஒன்றினை விபரிக்குக.

3. எகிப்தியக் கட்டிட, சிற்ப, ஓவியக் கலைகளுக்கும் எகிப்திய மக்களின் வாழ்க்கைக்குமிடையே இருந்த தொடர்புகளைத் தருக.

4. பைசாந்தியக் கலைமரபு அல்லது கோதிக் கலைமரபு என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

5. மறுமலர்ச்சிக் காலக் கலை வரலாற்றில் டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ ஆகியோரின் இடத்தினை மதிப்பிடுக.

6. கிரேக்கக் கலைமரபில் கட்டிடம், சிற்பம் ஆகிய கலைகளிற் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் என நீர் கருதுபவை யாவை?

7. சீன அல்லது ஜப்பானியக் கலைகளின் விசேட அம்சங்களையும் அதற்கான காரணங்களையும் தருக.

8. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

   யதார்த்தவாதக் கலைக் கோட்பாடு

   I. மனப்பதிவுவாதம்

   II. கியூபிசக் கலைக் கோட்பாடு

   III. சர்ரியலிஸ ஓவியப்பாணி

   IV. வெளிப்பாட்டுவாத ஓவியம்

   V. அரூப ஓவியம்